www.padippakam.com

# வெகுஜனம்




ஜனம்-2 ஒக்டோபர் நவம்பர்-1989 குரல்-4

படிப்பகம்

www.padippakam.com



# குறிஞ்சிக் குறைகள்

பழ - சுப்பையா

அன்றாட வருமானத்தில் வாழ்க்கை நடாத்தும் மலையக மக்களை வேலைக்குப் போகக்கூடாது என்ற எச்சரிக்கைகள், பயமுறுத்தல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மலையக மக்கள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். இவர்களை அரசின் பாதுகாப்புப் படைகளோ வேலைக்கு யாரும் போகாமல் விடக்கூடாது கட்டாயம் வேலைக்குப் போகவேண்டும் என்று அச்சுறுத்துகின்றனர். பயமுறுத்தலுக்குப் பயந்து வேலைக்குப் போகாமல் விடுவதா, அச்சுறுத்தலுக்குப் பணிந்து வேலைக்குப் போவதா என மலையக மக்கள் இருதலைக் கொள்ளி எறும்பாகத் திகைக்கின்றனர். இந்த வேதனையான விடயம் வெளியில் பயமுறுத்தல்களுக்கு பந்தோபஸ்து தேடியாகி அரசு வேலைக்குப் போகாதவர்களை வலுக்கட்டாயமாக வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றி வருகின்றது. இக்கொடுமையைப் பார்க்கும் பொழுது மலையக மக்களை குழப்புவதற்கு அரசின் ஒத்தாசையுடன்தான் இந்த பயமுறுத்தல் நடைபெறுகின்றதோ என எண்ணத் தோன்றுகிறது. மலையக மக்கள் உயிர் வாழ்வதற்கான வேலை, உணவு, உறைவிடம் பறிபோய் அனாதைகளாக்கப்படும் போது மலையக அமைச்சர்கள் மௌனமாய் இருக்கும் மர்மம் என்ன? தமிழ் பேசும் மக்களின் மாநில அரசாவது இவர்களின் இந்த ஜீவாதாரப் பிரச்சனையை அம்பலப்படுத்தி அரசின் கத்தினையை இழக்கவில் பிரச்சனைக்குத் தீர்வுகாண முன்வர வேண்டும்

படிப்பகம்

www.padippakam.com

# எமது எண்ணங்கள்

வணக்கம்

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள இயக்கங்களுக்கிடையில் ஒற்றுமை ஏற்படும் வகையிலான பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. இதுவரையில் ஜனநாயக நீரோட்டத்தில் கலக்க முன்வராதவர்கள் தாம் ஜனநாயகத்திற்கு திரும்புவதாக கூறிவருகின்றனர். இந்த நடவடிக்கைகளை தமிழ் பேசும் மக்களுக்கு உண்மையான சமாதானம், அமைதி ஏற்பட வேண்டும் என்னும் அவாவில் வரவேற்கிறோம்.

இச் செயற்பாடுகளை இயக்கங்கள் தமது சொந்த நலன்களுக்கான பகடைக்காய்களாகப் பயன்படுத்தாது, இழப்புகளின் மத்தியிலும், மரண பயத்திலும் நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கும் அப்பாவிப் பொதுமக்களுக்கு தேவையான அமைதி சமாதானத்தை மனதில் கொண்டு யார் யாரிடம் விட்டுக் கொடுப்பது என்னும் தன்மானப் பிரச்சனையை கைவிட்டு, விட்டுக் கொடுப்புகள் மேற்கொண்டு ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

ஐக்கியத்திற்கான பேச்சுவார்த்தைகளை நடாத்த விரும்புகிறோம், ஜனநாயகத்திற்கு திரும்புகிறோம் என ஒரு பக்கம் அறிக்கைகள் வெளிவருகின்றன. மறுபக்கம் மாகாண அரசின் தொண்டர்

www.padippakam.com

படையினரை சரணடையுமாறு தூண்டும் பிரசாரங்
கள் விநியோகிக்கப்படுகின்றன. இந்திய இரா
ணுவம் வெளியேறிய பகுதிகளில் இலங்கை இ
ராணுவத்தினருடன் இணைந்து இயக்கங்கள் மீ
து தாக்குதல்கள் நடைபெறுகின்றன. இளைஞர்
கள் வலுக் கட்டாயமாக கடத்தப்பட்டு பயிற்சி
அளிக்கப்படுகிறார்கள் என அறிக்கைகள் வரு
கின்றன. அறிக்கை விட்டவர்களோ இளைஞர்க
ளுக்கு பயிற்சி அளிக்கின்றனர். தமிழ் பேசு
ம் மக்கள் மத்தியில் பேராபத்தை உண்டு பண்
ணக்கூடிய இவ்விதமான முன்னுக்கு பின் முர
ணான மக்களை ஏமாற்றும் அரசியல் சக்தி
கள் அமைதியின் அச்சுறுத்தல்களாக அமையு
மென்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்திய இராணுவம் வெளியேறிய
பின்பு வடக்கு கிழக்கில் ஏற்படும் பாதுகாப்பு
வெற்றிடத்தை, இலங்கை அரசு இராணு
வத்தை கொண்டு நிரப்புவதற்கு பகீரதப்பிர
யத்தனத்தை மேற்கொண்டது. இதில் வடக்
கு கிழக்கில் சட்டத்தையும் ஒழுங்கையும்
நிர்வகிக்கும் பொறுப்பு மாகாண அரசிடமே விடப்
படைக்கப்பட வேண்டுமென முயற்சிகளை உறுதி
யாக மேற்கொண்டு வடக்கு கிழக்கு பாதுகாப்
பை பொறுப்பேற்று வெற்றி கண்டுள்ள மாகாண
அரசின் மாண்புமிகு முதல்வர் திரு. அ. வரத
ராஜப் பெருமாள் அவர்களையும், அவருக்கு உறு
துணையாக நின்ற அனைத்து மாகாணசபை உறுப்
பினர்களையும் பெரிதும் பாராட்டுகிறேன்.

மாகாண அரசின் அதிகாரப்பர
வலாக்கல் தொடர்பான ஜனநாயக வழிப்

www.padippakam.com

போராட்டத்தில், வடக்கு கிழக்கு மாகாண அரசிடம் சட்டமும் ஒழுங்கும் பேணும் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளதானது தமிழ் பேசும் மக்களின் வீரமிகு போராட்டத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். இதே போன்று ஜனநாயக வழியில் போராடி அதிகாரப் பரவலாக்கல்களை நிறைவேற்ற அமைந்த அதிகாரங்களைக் கொண்ட மாகாண அரசை உருவாக்கி, இம் மாகாண அரசானது தமிழ் பேசும் மக்களின் போராட்டத்திற்கு ஒரு புதுக் கௌரவமாக அமைய ஆவன செய்ய வேண்டுகிறேன்.

சட்டத்தையும் ஒழுங்கையும் ஒழுங்காகப் பேண உதவும் வகையில் பாதுகாப்பு காப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தேசிய தொண்டர் படையினரின் முக்கியத்துவத்தை உணர்ந்து இயக்க பேதம் பாராது இத் தமிழ் பேசும் மக்களின் மாகாண அரசால் உருவாக்கப்பட்ட தொண்டர் படையினர் என்பதை கருத்தில் கொண்டு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டுமென தமிழ் பேசும் மக்களுக்கு வேண்டுகோள் விடுகிறேன்.

மலையக மக்களும் தமது உரிமைகளுக்கு வேண்டி ஆயுதம் ஏந்தினால்தான் வடக்கு, கிழக்கு, தெற்கிற்கு போன்று மாகாணங்கள், யுத்தநிறுத்தங்கள், ஒப்பந்தங்கள் என அரசு மலையக மக்களையும் கவனத்தில் கொள்ளும் என்ற நிலையை தவிர்த்து மத்திய அரசு மலையக மக்களுக்கு ஆவன செய்ய வேண்டும். இல்லையேல் மலையக மக்களும் ஆயுதம் ஏந்துவதை தவிர்க்க முடியாததாகிவிடும் என்பதை கூறிவைக்க விரும்புகிறேன்.

www.padippakam.com

# அகதிகள்

கவிதை

சாந்தி

ஓடி வந்தோம் - ஓடி வந்தோம்
ஐரோப்பாவுக்கு ஓடோடி வந்தோம்
வந்ததன் காரணத்தால்
வாழ்க்கை முறையை புரிந்து கொண்டோம்
மறந்து விட்டோம் /
நாம் ஈழத்தவர் என்பதை
வருடத்தில் இருதடவை ஞாபகப்படுத்தி கொள்வோம்
அகதிகள் தான் என்பதை
ஆனால் எங்களை நாம்
எங்களுக்குள் வித்தியாசப்படுத்தி கொள்வோம்.

துப்பாக்கி ஏந்திய துர்ப்பாக்கிய இளைஞர்களால்
துன்பமும் துயரமும் எங்களை விட்டு நீங்காவிடினும்
அதைப்பற்றி நான் சிந்தனை இல்லை எங்களுக்குள்
ஏன் என்று கேட்டால்
தெய்வங்கள் எல்லாம் தேர்களில் வந்து
பொய்தான் நாமென புலம்பி போயின என்பார்கள்
என்றாவது ஓர் நாள் ஜேர்மன் தொலைக்காட்சியில்
மறுநாளே மறந்திடுவர்
பின்னர் ஈழத்து நிலைமைகளில் ஏதையாவது
எடுத்து கொண்டால்
கடற்கரை ஓரத்தில்
கண்ணாம்பூச்சி நடத்துகிறார்கள் என்கிறார்கள்.

என்றாலும் கோடைகாலத்தில் உல்லாசபயணமும்
எங்களை உறங்க வைக்கும் ஐரோப்பாவில்

www.padippakam.com

நாசிகளின் வளர்ச்சி கண்டு
நடுங்குகிறார் ஒரு சிலரோ
அப்பொழுது ஞாபகப்படுத்திக் கொள்வோம்
நாமெல்லாம் அகதிகள் தான் என்று.

---

# அறிவியலும் அழகியலும்

செல்வி பா. நிறைமதி
யாழ்ப்பாணம்

சிந்தனையாற்றலே மனிதனிடத்திலுள்ள மாபெரும் சக்தியாகும் அதனால் அவன் விலங்கு நிலையிலிருந்தும் உயர்ந்த நாகரிகம் அடைந்தான் ஆதிகால விலங்கினத்திற்கும் இன்றுள்ள விலங்கினத்திற்கும் இடையே வாழ்க்கை முறையில் குறிப்பிடத்தக்க மாற்றமில்லை ஆனால் அன்றுள்ள மனிதனுக்கும் இன்றுள்ள மனிதனுக்கும் வாழ்க்கை முறையிலும் மனப் போக்கிலும் தெளிவான பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன பல நூற்றாண்டு காலமாக நிகழ்ந்து வந்த இம் மாற்றங்களே மனிதன் வளர்ச்சியடைந்துள்ளான் என்ற உண்மையைக் காட்டுகின்றன சிந்தனையாற்றல் இல்லையாயின் இன்று விலங்குகளோடு காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்திருப்பான். அன்று குகைகளைத் தனது உறையுளாகக் கொண்ட அவன் சிந்தனைத் திறனால் வீடுகட்டி வாழத் தொடங்கினான். அம்முயற்சியின் தன்மை மேலும் விரிவடைந்து பச்சையிறைச்சியை யுண்டு வாழ்ந்த அவன் நெருப்பை கண்டறிந்து உணவைப் பக்குவப்படுத்தத் தொடங்கினான் அம் முயற்சியில் விஞ்ஞானம் மேம்படத் தொடங்கியது. அழகியலும் அறிவியலும் பல கிளைவிட்டு

www.padippakam.com

வளர்த்தன உணவுண்டு
பசிக் கொடுமை மாய்த்த
பின்னர் ஆதிமனிதர்
கூட்டங் கூட்டமாய்
சேர்ந்து ஆடலும்பாடலும்
நிகழ்த்தினர் அவர்களின்
பாடலிலே இசை இலக்
கியம் முதலியன அரும்பத்
தொடங்கின. அவர்களது
ஆடலிலே நாட்டியம்
மலரத் தொடங்கியது.
காலப் போக்கில் சிந்தனை
யாற்றலில் தொழிற்பட்டு
அழகியற்கலை சிந்தித்து
வளரலாயின அறிவிய
லாகிய எண்ணும் அழகி
யலாகிய எழுத்தும் சேர்
ந்ததே கல்வி ஆகும். மனி
தனை உயர்வடையச்
செய்வது கல்வியாகும்
அறிவைப் பெறுவதற்குக் கா
ரணமாக கண் எல்லா உறு
ப்பைவிட சிறந்ததாக
போற்றப்படுகிறது. ஆனால்
கண்ணினால் மாத்திரம்
கண்டறியாத அறிவுத்தி
றன் உலகினைத்தும் வியா
பித்து கிடக்கிறது. அதனை
அறிவதற்கு கல்வியாகிய
கண் வேண்டும். அதாவது
அறிவியலாகிய எண்ணும்

அழகியலாகிய எழுத்தும் இ
ண்டும். எனவே அவற்றை
சிறப்புடைய கண்ணோடு
ஒப்பிட்டு "எண்ணும் எழு
த்தும் கண்ணெனத்தகும்"
என்று கூறினார் ஆன்றோர்.
"எண்ணென்ப ஏனை எழு
த்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உ
யிர்க்கு" என்ற வள்ளு
வர் பெருந்தகையின் திருவ
மணியினின்றும் பிறந்த
முதுமொழி ஆகும். இவை
இரண்டிலுமுள்ள உவமை
களிலிருந்து அறிவியலும்
அழகியலும் உலக அறிவுத்
திறனினை அறிவதற்கேற்ற
சிறந்த கருவிகள் என்ப
தை உணரலாம். கல்வி
மனிதன் பூரண வளர்ச்சி
அடைவதற்கு பெருந்துணை
யாய் விளங்குவது அதனா
லேயே அது தேடற்கரிய
செல்வம் என்று போற்றப்
படுகிறது. அறிவு வளர்ச்சிக்
கு அறிவியல் பெரும்துணை
புரிகிறது அறிவு வளர்ந்து
மனம் வளராவிடில் மனி
தன் பண்பாடற்ற வல்ல
வனாக தான் மனிதனாக்க
ப்படுவான். மனவளர்ச்சி


படிப்பகம்

www.padippakam.com

யின் பயன்களாக அழ
குணர்ச்சியும் அறவுண
ர்ச்சியும் இல்லாதவனு
ம் மிருகப் பண்புள்ளவனா
ய் பயங்கர பிராணியாய்
விளங்கியவன். சித்திரம்
இலக்கியம், இசை, நாட
கம், ஓவியம், சிற்பம்
முதலிய அழகியல்கள்
மனவளர்ச்சிக்குரியன.
மனிதனின் அகவாழ்வை
ச் சிறப்படைய செய்வன
எனவே அழகியல் அறிவிய
ல் என்னும் இரண்டினையும்
மனிதன் பூரண வளர்ச்
சியடைகிறான். அறிவிய
ல் வளர்ச்சியினால் மனி
தன் இன்று உலகில்
நடத்தும் விந்தைகள் என்
ணிலடங்காதவை. மனி
தன் மண்ணையும் கடலை
யும் வெற்றிகொண்டு பயணம்
செய்ததோடு நின்றுவிடா
து விண்வெளியையும் பு
றங்கண்டு பிறகோள்
களுக்குச் செல்வதற்கும்
முயன்று விட்டான். அவன்
நோய் தீண்டுதலைத் தெ
ய்வத்தின் சீற்றம் என
நம்பிய மனிதன் இன்று
அதனை வெற்றிகொள்ளும்
அணுக்கும் மருத்துவத்துறை
யை வளர்த்துவிட்டான்.
அவன் இன்றளவும் இன்று
ஆற்றல் மிக்கதான பல
சக்திகளை கண்டுபிடித்தா
ன். அதனை வாழ்க்கைப்
பொருள்களை பெருக்கி
விட்டான். மனிதன்புற
த்தேவை அனைத்தையும்
அறிவியல் இவ்வாறு
சேவகனாய் நண்பனாய்த்
துணைப் புரிகிறது. இவ்வி
அறிவியல் அழகியல் என
இருவகைப்படும் அவையிர
ண்டும் இரண்டு கண்க
ளைப் போற்றப்படு
கின்றன. ஆயினும் இன்று
அறிவியலுக்குரிய பெரு
மதிப்பு அழகியற்கலை
களிலில்லை அறிவியலைக் கற்
றுள்ள ஆர்வம் அழகியலை
க் கற்பதில்லை. கல்லூரி
களிலும், பல்கலைக்கழகங்
களிலும் அறிவியற் பாட
ங்களைக் கற்க விரும்பு
வோர் தொகை பெரிதா
கவும் அழகியல் பாடங்க
ளைக் கற்க விரும்புவோர்
தொகை சிறிதாகவும் கா
ணப்படுகிறது. இதனால்
தொழிலும் வருவாயும் தேடு
(ராப்புக்கள்பார்க்க)

www.padippakam.com

# சந்தரப்பிள்ளையின் சிந்தி அரசியல் - ஆறு

தோட்டத்திலிருந்து திடீரென
வாத்தியார் புல்லுக்கட்டோடை
சுவிக்கோப்பிள்ளையின் படலைக்கு
பக்கத்தில் போட்டு விட்டு
பிள்ளையின் வீட்டுக்குள் நுழை
ந்தார். இரண்டு மூன்று நாட்க
ளடையே திறக்கவில்லை.
என்ன நடந்தது. என விசாரி
க்கவேணும் என்று யோசித்த
வண்ணம் வந்த வாத்தியாரை
க் கண்ட பிள்ளையர்
வாருங்கோ வாத்தியார்
வாருங்கோ என்ன தோட்ட
த்தாலயோ
பிள்ளையர் என்ன ஒரு
மாதிரி முழுசுகிறீர் கடையும்
இரண்டு, மூன்று நாட்களாக
திறக்கயில்லை என்ன பிரச்
சினை
அது வாத்தியார் வந்து-----
என்டு பிள்ளையார் இழுத்தா
ர்.
என்ன மெழுங்குறீர் முழு
சாக சொல்லும்.
அதை ஏன் கே
ட்டுறியள் வளர்த்தகடா
மாரில பாய்ந்த மாதிரி
போராட்டம் என்றுபிள்ளை
யள் கேட்க கேட்க வாரி
வழங்கினத்தில ஒரு பகுதியை
கொடுத்தனவுகள் இப்பஎன்
னடா என்றால் இந்தியன்
ஆமி வந்த பிறகு இரண்டு
வருசமாய் இருந்தும் கேட்
கேயில்லை இந்தியன் ஆமி
போகப் போகுது சண்டைபிடி
த்தம் வந்திட்டுது என்ட
உடனே பழையபடி தொடங்கி
விட்டுனம். அதுவும் இரண்டு
வருசமாய் கொடுக்காத எல்லா
த்தையும் சேர்த்து ஒருமிக்க
தரட்டாம். போன கிழமை
யாழ்ப்பாணம் ரவுணுக்குள்ள
வந்து எல்லாரிட்டையும் சொ
ல்லிப்போட்டு போயிருக்கின
மாம் பக்கத்தில ஆபிசுகளை
யிலையும் சொல்லியிருக்கினா
ம் என்னட்டை எப்ப வரப்
போகினமோ தெரியாது.
இது என்ன கப்பமோ

அல்லது வரி வசூலிப்போ
ண்டுமாய் விளங்கவில்லை.
அதோட பாதர்யார் வெளி
நாட்டிலே ஆட்கள் இருந்
தால் ஒரு ஆளுக்கு 50,000
ஆயிரம் கொடுக்க வேண்டுமாம்
இதுபெரிய அநியாயம் இதை
யாரு கேட்கிறது என்றுதான்
விளங்கவில்லை.

பாதர்யாருக்கு
பிள்ளையைப்பார்க்க பாவமா
கவும் இருந்தது ஆத்திரமாக
வும் வந்தது பிள்ளையா
மட்டும் இல்லை இவனைபோல்
எத்தினையோ அவசரக்குட்
கைகளின்ரை வேலையால
தான் வடக்கு கிழக்கு இப்படி
போச்சு என நினைத்து கொ
ண்ட பாதர்யார் ஆத்திரத்
தை அடக்கி கொண்டு இது
க்காக மனதை போட்டு
அலட்டிக் கொண்டாலையும்
ஆனால் இப்பவாவது இதுதான்
அராஜகம் இதுக்கு பெயர்
போராட்டம் இல்லை இது
அடக்கப்பட வேண்டும்
என்றதை உணரும். போ
ராட்டம் என்ற பெயரால
அரசியல் என்ற போர்
வையில சிறு ஆட்டம்
ஆடுவதை ஆர் எண்டாலும்

அவனை விட்டு வைத்தால்
கடையில எல்லாருக்கும் இந்த
கதிதான். எப்பவும் பிள்ளையர்
ஒரு உதவியை ஒருவர்களிப்
பை செய்தால் அது பாராட்ட
ப்பட வேண்டும் அதைவிட்டு
வீட்டு வாண வேடிக்கையை பா
ர்த்து எல்லாரும் ரசிக்கிறோம்
என்று நொருத்தால் கடையில
இதுதான் நடக்கும்.

அது சரி பாதர்யார்
மார்கழி 31க்கிற உண்
மையில இந்தியன் ஆமிபோத
மோ போனால் எத்தனை
பிரச்சினைதான் பனிசாரிம்
மதியாய் வாழவேண்டிய போல
த்தான் கிடக்குது. பழையபடி
இந்த ஆமிக்காரன்வர
நிரம்ப நெகிழ்ந்தன் தங்க
ளுக்குள்ள அடிபட எல்லாம்
கொலைக்கும் கொலைக்குமாய்
போகப் போகுது.

பிள்ளையர் உங்களை
ப் எப்பவும் தாய்ப்பாசம்
இவ்விக்கோதையும்.

அண்ண பாதர்யார் விசர்
தனத்தை கதைக்கிறியள் இப்
பவும் அனைவரும் தரத்தில்
வாறவையை பார்த்தவுடனே
உடனே சொல்லுவன் ஒரு
கதை தாய்ப்பாசம் இல்

www.padippakam.com

வாத்தியார் அதை வழித்தார் இப்படியான பல முன்னோடியானவர்களோடை எப்படி கதைக்கிறது என மனதுக்குள் திட்டிக் கொண்டார்

அது இல்லை காரணம் பிள்ளையள் நான் சொல்ல வந்தது என்னவென்றால் உங்களுக்கு எப்பவும் இன்னொருத்தரின் கஷ்டம் தீர வேண்டும் என்ற எண்ணம் அடக்கம் என்கிறதை பற்றி சொல்ல அங்கை இன்னொருக்கு போதிக்கிறது இல்லை. மற்றவங்கள அழிச்சால் இயக்கங்கள் வேறும் இருந்தபோதும் வேஷமான அழிச்சு. தென்னாடு இயக்கங்களை இயக்கங்கள் அழிச்சால் வெல்லுற இயக்கம் வேறும் இயக்கங்களை பலவீனம் ஆக்கிறமாதிரி மற்றவங்கள அழித்தால் இந்தியா வேறும் இந்தியச் அழிச்சால் அதுவங்க திருப்பி அனுப்ப வேண்டும் பிறகு இப்ப முழுசாகிறியள். உங்களை இருந்தாலும் தீர்த்து முடியாது ஒரு நாடு பிறை விட்டால் பிறை கொண்டுதான் முன்று

நூறும் இப்ப எத்தனை வருசமாய் நீங்கள் இப்படியே இருக்கிறியள் இப்படியே நீ இருக்காமல் இருந்து என்ன செய்ய போறியள்.

நீங்கள் சொல்லுறது நியாயம் இருக்கு வாத்தியார் ஆனால் நாங்கள் என்ன செய்யிறது எங்களுக்கு உங்களைப் போல பாவங்களை போக்காட்டியும் கொஞ்சமா வரு இப்ப பாவத்தை ஆனால் வாய் திறக்க இயலாது அது தானே வாத்தியார் பிரச்சனை ஆனால் வாத்தியார் எல்லா இயக்கங்களும் ஒன்றுதான் ஒருத்தரும் சரியில்லை.

அது சரி உங்களோடை பொடியள் இப்ப சரியில்லாமல் போய் விட்டான்கள் அது தான் உமக்கு கவலை அதுவும் எல்லாரையும் கதைக்கிறீர். அராஜகம் அராஜகம் என்று கத்தினியள் இதை கேட்பார் யாரும் இல்லையென்று ரோட்டில் நின்று கத்தினியள் அராஜகத்தை தட்டிக் கேட்க அந்த பொடியள் புறப்பட்டால் அதையும் அராஜகம் என்கிறியள். உங்களுக்கு பகுத்தறிவு இல்லையோ அறிவு இல்லாத மாதிரி நடக்கிற



படிப்பகம்

www.padippakam.com

யனோ. இந்த ஏழு நாடு உதயன். பிரசெலிடேப் பனை நிற்பாட்டியாசித்தை என்று கேட்டால் ஒருகியக் கம் வெஸ்லிச்சதாம் இந்த ஒப்பந்த செய்தியை போடுவீர்களோ என்டு மற்ற கியக்கம் சொல்லிச்சதாம் அவை சொல்லி போடக் கூடாது நீங்களாய் போடுறதாய் இருந்தால் போடு வீர்களோ என்டு முதல் போடு வீர்களோ என்று சொன்ன வை சொல்லியருக்காம் உங்களுக்கு பத்திரிகை சுதந்திரம் இல்லை சுதந்திரம் வரும் வகைக்கும் பத்திரி கைகாரடாத்த வேண்டாம் என் டு இது என்ன காணும் புது டா, பத்திரிகைகள் தங்களை இஷ்டத்திற்கு செய்திபோட வேண்டும் அவைகளை அதை போடுங்கோ இதைப்போடுவீர்களோ என்டு சொல்லிப்போட்டு இப்ப பத்திரிகை சுதந்திரம் இல்லையென்டால் யாருக்கு காதிலே பூசுற்றுகிறீர்கள் நம் நீ என்ன வம்பு வேலைக்கு காது இருக்கும் கதைச்சொல் மண டையிலேயேறு (புதியகலாச்சா ரம்) நான் வாறன் என்டு கூறி வாத்தியார் நடையை கட்டினார்.

---

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்வத்தால் எழுந்தது ம் வாழ்க்கையின் புறத் துறையிலேயே ஏற்பட்ட அபிமானத்தால் விளைந் ததும். இதிலே வரம்ப திக்கத்தினை இது ஒருகண் ணைக் கட்டாக்க - மற்றொரு கண்ணைத் தனியேயேற்ற வாறும் இருகண்களையும் வேண்டுகொள்ளாததிலே அறி வுடைமை. எனவே அறிவியல் கற்போர் அழகியலிலும் அழகியல் கற்போர் அறிவி யலிலும் ஒரளவு தேர்ச் சி பெறல் வேண்டும். அப் போது தான் அவர்கள் பூரண வாழ்வு வாழ்வதற்கு வழிகண்டவர்களாவர்.

www.padippakam.com

# 1988ம் ஆண்டில் மலையகத்தில் 14 ஆயிரத்து 710 ஏக்கரில் குடியேற்றம்

கோவலன்
பதுளை

தோட்ட பொருளாதார அமைப்பை மாற்றி அமைத்தே ஆகவேண்டும் என்றே அரசாங்கத்தின் பிரதான தலைவர்கள் திடசங்கற்பம் கொண்டுள்ளனர் ஆனால் அப்படி மாற்றும் போது அவற்றுக்கான தோட்ட தொழிலாளர்களின் நிலைமை என்ன என்பது பற்றி ஒரு விதமான கருத்தும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை ஜனாதிபதி பிரேமதாச 1989ம் ஆண்டு செப்டம்பர் 17ம் திகதி மாம் தடும் மையத்தில் உரையாற்றும் போது 19ம் நூற்றாண்டில் மத்திய மலைநாட்டில் காடுகளை அழித்து வர்த்தக பயிர்களை பயிரிட்டதன் மூலம் நாட்டில் சுற்றுச் சூழல் சமநிலை பெருமளவு பாதிக்கப்பட்டது. எனவே இதனை மாற்றி அமைக்க வேண்டும். என உரையாற்றினார் அவரும் தோட்ட தொழிலாளர்களின் எதிர்காலம் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை.

மலையக மக்களுக்கும் காணி நிலம் வேண்டும் தோட்டக் காணிகள் பெரும்பான்மைக்கு பிரித்துக் கொடுக்கும் போது தோட்டத் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மலையகத்தில் வலுப்பெற்றுள்ளது. இது நாடெங்கும் எதிரொலிக்கின்றது. தோட்டப்பகுதிகளில் தரிசு நிலங்கள் என்று ஆயிரக்கணக்கான ஏக்கர்களை ஒதுக்கி பெரும்பான்மை மக்களுக்கு மட்டும் பிரித்து கொடுப்பதை மலையக மக்கள் எதிர்த்து வந்துள்ளனர். தோட்டக்காணிகளை அபகரித்து வெளியாருக்கு பகிர்ந்து கொடுத்து வருவதை தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்து சகித்துக் கொள்ள போவதில்லை என்ற அடிப்படையிலேயே காணியுரிமையை மலையக மக்கள் கோருகின்றனர். அவர்களின் வரலாற்றுக்கு மிக்க. போராட்டங்கள்



படிப்பகம்

www.padippakam.com

தோட்டக்காணிகளை வெளியாருக்கு வழங்குவதை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

மலையகத்தில் தோட்டக் காணிகளை பிரித்துக் கொடுப்பதை யாரும் எதிர்க்கவில்லை. ஆனால் தோட்டக்காணிகளை பிரித்து கொடுக்கும் போது மலையகத் தமிழ் மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர். இந்த நாட்டுப் பிரஜைகள் என்ற ரீதியில் மலையக மக்களுக்கும் ஏனைய மக்களுக்கு காணி வழங்கப்படுவது போன்று வழங்கப்பட வேண்டும் என்ற நியாயப்பாடு அண்மைக்காலமாக மேலும் வலுப் பெற்றுள்ளது. தோட்டக்காணிகள் மட்டுமின்றி மலையகத்தில் ஏற்படுத்தப்படும். குடியேற்றத்திட்டங்களில் மலையக மக்களுக்கும் காணிகள், வீடுகள் வழங்கப்பட வேண்டும் என்பது அவர்களின் பிரதான மான அடிப்படை அரசியல் கோரிக்கையாகியுள்ளது. எனினும் தோட்டப் பொருளாதார அமைப்பை மாற்றியமைத்தே ஆக வேண்டும். என்று அரசாங்கத்தின் பிரதானதலைவர்கள் திடசங்கற்பம் கொண்டுள்ளனர். ஆனால் அப்படி மாற்றும் போதுலட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களின் நிலைமை என்ன என்பது பற்றி எவ்வித கருத்தும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.


எனவே மலையகத்தில் காணி பகிர்வு செய்யப்படும் போது மலையக மக்கள் தம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்றுகாணிபகிர்ப்பில் அவர்களுக்கும் பங்களிக்க வேண்டும் என்பதும் உறுதியான அரசியல் கோஷமாக முன்வைக்கப்பட்டுள்ளது. காணிபகிர்ப்பில் தேசிய இனவிகிதாசாரமின்றி மாவட்ட இனவிகிதாசாரமே கடைபிடிக்கப்பட வேண்டும் என்று இ.தொ.கா ஊடாக அரசாங்கத்திடம் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. மாவட்ட இனவிகிதாசாரம் கடைபிடிக்கப்பட்டால் மலையகத்தில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் இடங்களான கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரிய மாவட்டங்களில் மலை



படிப்பகம்

யக மக்களின் உரிமைக
ள் பாதுகாக்கப்படா.
எனவே மலையகத்தில் கா
ணி பகுதி மாவட்ட
இன விகிதாசாரப்படியே

ணும். அக் கோரிக்கை ஜனா
திபதியால் அமைக்கப்பட்ட
ன்ற காணி ஆணைக்குழுவொ
ன்றை திட்டத்திலும் இடம்
பெறும் என்றே எல்லோரும்




செய்யப்பட வேண்டும்
என்ற நிலைப்பாட்டில்
மலையக மக்கள் முழு
ஆதரவை கொண்டுள்ளா

நம்புகிறார்கள்.
இது இவ்வாறிருக்க கண்டி, மா
த்தளை, நுவரேலியா, பதுளை
இரத்தினபுரி ஆகிய மாவட்ட

www.padippakam.com

டங்களில் 1988ம் ஆண்டு பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன காணிகளை, குடியேற்ற திட்டம் என்பவற்றிலும் கவனம் திரும்பியுள்ளது. 1988ம் ஆண்டு மலையகப் பகுதியில் 4ஆயிரத்து 710 ஏக்கர் காணி பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அக்காணி தோட்டக்காணியா, காட்டுக்காணியா என்பதோ இன ரீதியாக எத்தனை பேருக்கு பிரித்து வழங்கப்படும் என்பது பற்றியோ இன்றும் காணி அமைச்சு முடிவு செய்யவில்லை ஆனால் மேற்படி காணி அடுத்த வருடம் பிரித்துக் கொடுக்கப்படவுள்ளது. என்பது பற்றி மலையக மக்கள் அக்கறை செலுத்த வேண்டியுள்ளனர்.

**ஸ்வர்ணபூமி திட்டம்:-**

அடுத்த வருடம் ஸ்வர்ணபூமி குடியேற்றத் திட்டத்தின்படி கண்டி மாவட்டத்தில் ஆயிரம் ஏக்கர் காணி இரண்டு ஆயிரம் பேருக்கும், மாத்தளை மாவட்டத்தில் ஆயிரம் ஏக்கர் ஆயிரம் பேருக்கும், நுவரெலியாவில் 700 ஏக்கர் 500 பேருக்கும், பதுளையில் 1200 ஏக்கர் ஆயிரம் பேருக்கும், இரத்தினபுரியில் 1200 ஏக்கர் ஆயிரம் பேருக்கும் பிரித்துக் கொடுக்கப்படவுள்ளது. அதன்படி ஸ்வர்ணபூமி திட்டத்தின்படி மலையகத்தில் 5 ஆயிரத்து 100 ஏக்கர் காணி 5500 குடும்பங்களுக்கு பிரித்துக் கொடுக்கப்படவிருக்கிறது.

**கிராம விரிவுபடுத்தல் திட்டம்:-**

கிராமவிரிவுபடுத்தல் திட்டத்தின்படி 3100 ஏக்கர் காணி பிரித்துக் கொடுக்கப்படவிருக்கின்றது. கண்டிமாவட்டத்தில் 400 ஏக்கர் 800 குடும்பத்திற்கும், மாத்தளையில் 500 ஏக்கர் 250 குடும்பத்திற்கும், நுவரெலியாவில் 400 ஏக்கர் 800 குடும்பத்திற்கும், பதுளையில் 800 ஏக்கர் 750 குடும்பத்திற்கும் இரத்தினபுரியில் 1000 ஏக்கர் 800 குடும்பத்திற்கும் பிரித்துக் கொடுக்கப்படவிருக்கிறது.

**விசேட காணி சட்டம்:-**

காணி தொடர்பான விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் மலையகத்தில் அடுத்த வருடம் 2 ஆயிரத்து

www.padippakam.com

125 ஏக்கர் காணி வழங்கப் படவுள்ளது.

அதன்படி கண்டியில் 500 ஏக்கர் 600 குடும்பத்திற்கும், மாத்தளையில் 300 ஏக்கர் 400 குடும்பத்திற்கும், நுவரெலியாவில் 500 ஏக்கர் 600 குடும்பத்திற்கும், பதுளையில் 25 ஏக்கர் 50 குடும்பத்திற்கும் இரத்தினபுரியில் 800 ஏக்கர் ஆயிரம் குடும்பத்திற்கும் பிரித்துக் கொடுக்கப்படவுள்ளது.

<u>காணி சுவீகரிப்பு திட்டம்:-</u>

காணி சுவீகரிப்பு திட்டத்தின் கீழ் மலையகத்தில் 2 ஆயிரத்து 185 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படவுள்ளது. கண்டி மாவட்டத்தில் 400 ஏக்கரும், மாத்தளையில் 400 ஏக்கரும் நுவரெலியாவில் 400 ஏக்கரும் பதுளையில் 100 ஏக்கரும் இரத்தினபுரியில் 885 ஏக்கரும் சுவீகரிக்கப்படவுள்ளது.

<u>காணி சீர்திருத்த திட்டம்:-</u>

காணி சீர்திருத்த திட்டத்தின் கீழ் மலையகத்தில் 2 ஆயிரத்து 200 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படவுள்ளது. அதன்படி கண்டி மாவட்டத்தில் 200 ஏக்கரும், மாத்தளையில் 400 ஏக்கரும், இரத்தினபுரியில் 1000 ஏக்கரும் சுவீகரிக்கப்படவிருக்கிறது.

அடுத்த வருடம் மேற்படி காணி திட்டங்களின் கீழ் பகிர்ந்து கொடுக்கப்படவுள்ள காணிகளில் மலையக மக்கள் அவர்களுக்குரிய உரிமையை நிலைநாட்ட மிகுந்த அக்கறை செலுத்த வேண்டியுள்ளார்.

<u>உறுதிகள் வழங்கல்:-</u>

மேற்படி விடயங்கள் மட்டுமன்றி கடந்த காலங்களில் மலையகத்தில் உள்ள காணிகளில் சட்டவிரோதமாக குடியேறியுள்ளவர்களுக்கு காணி வழங்கல் திட்டத்தின் கீழ் சட்டபூர்வமான உறுதிகள் வழங்கப்படவுள்ளன.

அதன்படி கண்டி மாவட்டத்தில் 750 ஏக்கரில் குடியேறியுள்ள 2 ஆயிரம் குடும்பங்களுக்கும், மாத்தளையில் 225 ஏக்கரில் குடியேறியுள்ள 1500 குடும்பங்களுக்கும், நுவரெலியாவில் 65 ஏக்கரில் குடியேறியுள்ள 150 குடும்பங்களுக்கும், பதுளையில் 200 ஏக்கரில் குடியேறியுள்ள 200

www.padippakam.com

குடும்பங்களுக்கும், இருந்த திணைபுரியில் 1200 ஏக்கரில் 1500 குடும்பங்கட்கும் அக் காணிகளை சொந்தமாக்கும் உறுதிகளை காணி அமைச்சு வழங்கியுள்ளது.

(இந்தக்கட்டுரை 1987ம் ஆண்டு நவம்பர் மாதம் ஸ்ரீமத்திருமதி இ. தம்பையா அவர்களினால் வீரகேசரி இந்துசி பரவலில் வெளியானது)

முன்னே பின்னே ஒன்று (1)
சேரச் சைவ (ப)ராய் (0)
ஓம் நமச்சிவாயவும்
சிவாய நமவும்
சிறக்கச் சொல்லும்
இவர்

மறுப்பரோ
தம் மதிப்பினைக் காண
ஒன்று சேர்தலே

வே. ஆ. சுப்பா



www.padippakam.com

# உங்கள் பக்கம் உங்கள் பக்

மெஜனம் ஆசிரியர் குழுவுக்கு.

இறுதியாக வெளியான ஜனம்-2 இதழ்-3 இனைப் படித்தேன். "ஒப்பந்தம் ஒரு கண்ணோட்டம்" என்ற ஆய்வுக் கட்டுரையில் கட்டுரையாளரின் ஆய்வு குறிப்பிடும் படியாக இருப்பினும் இந்தியாவின் நேரடித் தலையீட்டுக்கும், இவ் ஒப்பந்தத்திற்கும் விடுதலை இயக்கங்களின் இயக்க முரண்பாடுகளே வழி சமைத்துக் கொடுத்தது என்பதை உறுதியாக குறிப்பிடவில்லை. "சீதனம் ஐயா சீதனம்" என்ற சிறுகதையானது முழுமையான வடிவம் பெறாமல் அரை குறையாக தீர்த்து விட்டதான தோற்றம் பெற்றுள்ளது.

"கழகமும் இந்த பாடம்" என்னும் ஆய்வு கட்டுரையானது தேசியப் போராட்டத்தில் கழகத்தினுடைய பாத்திரத்தினை அப்படியே விளக்கியிருப்பது உண்மையெனினும் கழகத்தினுடைய தவறுகளை அம்பலப்படுத்துவதற்கு கழகத்திற்குள் இறந்த பச்சை ஜனநாயகம் இன்னமும் இருந்ததான உள்ளது என்பதை கட்டுரையாளர் எடுத்துக் கூறத் தவறிவிட்டார். "சிந்தனையின் பூர்வீகம்" என்னும் கவிதையில் அழுக்குகள் இங்கே சோப் வேஷம் போட்டு சாகர்தாரம் பேசுகின்றன என எண்ணினேன் என ஏதோ எம்மை நிர்வாணமாகக் காட்டி விட்ட, கவிஞர் சந்திக்கு எனது பாராட்டுக்கள். இறுதியாக உலகக் கண்ணாடிப் பகுதியிலிருந்து சர்வதேச விடயங்களை அறிந்து கொண்டிருந்த என்போன்றோருக்கு இறுதி வெளியீடு கவலையைத் தந்தது. இனி வெளி வரவிருக்கும் வெளியீடுகளில் அப்பகுதிக்கு கூடுதலான பக்கங்களை ஒதுக்கும்படி வேண்டுகிறேன்.

சந்திரன். பரீஸ்.

ஜேர்மனியில் இருந்து வெளிவருகின்ற வெளியீடுகளில் ஜனம் வித்தியாசமாகவே உள்ளது என்பதை மனம்விட்டு ஏற்றுக் கொள்ள வேண்டும். [illegible] குறிப்பாக தமிழ் மக்களுக்கான காத்திரமான கருத்துக்கள் அடங்கிய கட்டுரைகள் இடம்பெற்றிருக்கின்றன. மேலும் [illegible] தொடர்பான ஆக்கங்களையும் விமர்சனங்களையும் விரைவில் எதிர்பார்க்கின்றேன்.

வேலவன்
[illegible]
[illegible].



படிப்பகம்

# "கற்றவை நன்றாய்"

கவிதை

வேற்படை

பற்றவை நாட்டில்
கற்றவை நன்றாய்
வெற்றிடம் விடாதே
பற்றிக் கொள் இன்றே
உற்ற நோக்கினும்
உன் தன் பொறுப்பை
தொற்று நோய் போல்
தொடரும் துயரம்
ஆற்றிய தொண்டுகள்
அவமாய் போகுது
ஆக்கிய உணவை
அருந்தாதது போல்
ஏக்கம் இருளாய்
எங்கும் சூழுது

கருவில்லாத வெறும்
உருவைத் தேடுவோர்
சுவரில்லாத விண்ணில்
சித்திரம் வரைகின்றார்
சரியில்லாத மலையா இங்கு?
சரித்திரம் திரும்பும்
தரித்திரம் மாறும்

உலகம் முழுதுமே
புலால் மணம் கமழுது
உடல்கள் அழியுது
உயிர்கள் போகுது

உருளும் நிலைகளின்
எண்ணிக்கை விகிதத்தில்
உழைக்கும் கரங்களோ
இளைத்த பணத்தையும்
உதிரம் இழப்பதும்
இருவகையிலும் இவர்களோ

உணர மறுக்கின்றார்
மரண பயத்தால்
வினா நிலவுகளாகினை
விட்டுப்பின்
விழுந்து இறக்கின்றார்
தூரவும் கொடுக்கின்றார்
கூற்றின் ஆற்றலையும்
தூ.பூக்கள் மணக்குமா?
வேற்றுமை மாறினால்
சாற்றல் வேண்டுமோ!

# கழகம் வந்த பாதை

கண்ணன்
றேய்ந்லிங்கன்

"பொருணம்" ஒக்ரோபர்-டிசெம்பர்-89 மாத சஞ்சிகையில் வெளியிடப்பட்ட "கழகம் வந்த பாதை" என்ற கட்டுரையைப் படித்தேன். நான் கழகத்தின் ஓர் உறுப்பினர் என்ற வகையிலும் எமது கழகத்தை மக்கள் தவறாக புரிந்து கொள்ளக்கூடாது என்பதற்காகவும், இக்கட்டுரையை எழுதிய சகதோழர் கழகத்தைப் பற்றி முழுமையாக அறியாதவராகவும் தொலைநோக்கோடு சிந்திக்கத் தவறியவரார் என்பதாலும் எமது கழகம் பற்றிய சில உண்மை நிலைகளையும், கழகத்தின் சரியான போக்கினையும் இங்கு விளக்கிக்கொள்கின்றேன்.

கழகத்தின் செயலதிபரின் மரணத்தையடுத்து எமது மேற்கு ஜேர்மன் கிளையால் வெளியிடப்பட்ட தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் தோழர் முகுந்தனின் பாத்திரம் என்ற தலைப்பிலான அறிக்கை விரிவாக விளக்குகின்றது என்பதனை இன்றுவரைக்கும் கொண்டு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமானது சாதி, மத, இன பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் சகல தமிழ் மக்களையும் உள்ளடக்கியதாகவே வளர்ச்சியடைந்தது! வந்தது! கழகம் என்ற பெயரை வைத்ததால் நாம் சாக்கடை அரசியலைப் பின்பற்றியவர்கள் அல்ல. புரட்சிகரம், விடுதலை, முன்னணி போன்ற பதங்களை இணைத்து பெயரிட்டவர்கள், புரட்சி போன்ற பதங்களை இணைத்து பெயரிட்டவர்கள் புரட்சி செய்ததும் இல்லை.

விடுதலையை முன்னெடுத்ததும் இல்லை. எனவே இதற்கு மேலும் இந்த பதங்களின் பெயர்களைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை. அத்தோடு கட்டுரையாளரால் [ கழகத்தின் வளர்ச்சிக் காலங்களில் நடந்த சம்பவங்கள் உண்மையாக

இருந்தாலும்] கழகத்தோடு சம்பந்தப்படாத சொந்த விஷயமாகப் பிரயோகித்திருப்ப தியாகராஜ [மேல்கீழ் தோப்பு பெரியப்பா] இவர் கழகம் பற்றி முழுமையாக தெரியாதவரென்பது புலனாகிறது!

எமது தேசிய விடுதலை இயக்கங்களில் எதுவாயினும் அவற்றின் ஆரம்பம் பயங்கரவாதமாகவே இருந்தது. எனவே தான் எமது கழகத்தினதும் வளர்ச்சிக் காலங்களில் ஆரம்பகால உறுப்பினர்களே சதிநடத்துபவர்களாக இருந்தார்கள் இவர்களிடையே பயங்கரவாதத்தின் எச்ச சொச்சங்களையும் கொண்டவர்களும் இருந்தார்கள். இவர்களின் தவறை பயங்கரவாதங்களோடு பார்த்தாலும் கழகம் கட்டுக்கோப்பு குலையக் கூடாது! என்ற நோக்கத்தாலும் கழகத்துக்குள்ளேயே சில சம்பவங்கள் நடந்தது உண்மையே. இது வரலாற்றுக்கு ஒன்றும் புதியதுமல்ல. இருப்பினும் சம்பவங்களை மிகைப்படுத்தி மக்கள் வெறுப்பானவர்களா மாறும்படி யி மனிதநாகரீகமற்ற செயலாகும். விமர்சனங்களுக்கும், விளக்கங்களுக்கும் முக்கியம் கொடுக்க கழகம் என்றும் தவறியதில்லை. எமது கழகத்தின் செயலதிபர் அடிக்கடி கொல்லப்பட்டார் என்பதற்காக அவரைக் குற்றவாளி என முடிவு செய்து விட முடியாது. பொதுவேலைத்திட்டத்தில் ஈடுபடுகின்ற எந்த ஒருவனினுடைய செயல்பாட்டிலும் நன்மையும், தீமையும் இருக்கத்தான் செய்யும்

"குணம் நாடி குற்றம் நாடி" "மிகை நாடி மிக்க கொளல்" என்பதற்கிணங்க இவருடைய சேவையையும், அவருடைய தவறையும் சீர்தூக்கிப் பார்த்து முடிவு செய்து கொள்ள வேண்டும் இன்றுவரையில் கழகம் எந்த ஒரு ஆதிபத்தியத்தின் வலைக்குள் விழாமல் தன்னைப் பாதுகாத்துக்கொண்டு வந்திருந்து அது தனது கொள்கையில் எப்பவும் உறுதியாகவும், தெளிவாகவும் இருந்தது என்பது தெளிவாகின்றது தெளிவில்லாப் போர்முறை


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

து வரும்போது அதே இருந்த
பள்ளிக்கூடம் இருக்க
கூடாது என்று கேட்டோம்,
பிரதேச மாணவ இலவசத்தின்
ஒன்மையில் கூடிய கோரிக்கை
கொண்ட இவ்வமை அதிபர்
இன்று பாடசாலை நடாத்
தினார் என்று சொல்லிவிட்
டு அவரை மறு வார்த்தை
யின்றி அடித்தே கொன்றார்
கள். அதே இடது செவிக்கு
அருகிலான வேட்டொலி!
அவரது கண்ணுக்கு எதிரே
இன்றுபோல அதிபராயம்!
இவர்களை விடக் கூடாது
இப்படியான சமூகத்தில்
இருந்தென்ன இல்லாவிட்டா
ல் என்ன? மிகவும் அவமா
னம் வைத்திருந்த அந்த
அதிபரையும் கொன்றுவிட்
டார்கள். இவர்களை எதிர்
க்க இன்றுபோல இவனை
சின்னவ் சோர்க்க முடியாததை
எண்ணினேன் இவர்கள் இருக்
கக் கூடாது. ஆத்திரத்தால்
உடம்பு நடுங்கியது கையி
ல் கிட்டாரில் தான் இருந்
தது. கால்சட்டை பைக்கு
ள் இருந்ததை எடுத்தேன். அடுத்த
கணம் இருவரில் ஒருவன
து நெற்றிப் பொட்டுக்கு

குறி வைத்து விட்டான்
வெகு நேரமாகியும் மற்றவ
ன் வராததை பயங்கர
மாக எண்ணிக் காத்து
கொண்டிருந்த தளபதி
ச் செய்தியைக் கேட்டதும்
புயலாக அடித்து விட்டான்.
இருவரைத் தேடும் போரா
ளிகளாம் பழக்கமின்றே பின்
னை அழித்து உதிர்த்துவிட்
டார்களே! தளபதியின் ஓப்
பாரி அந்த கிராமமே கேட்
டது. அவனது கெட்டித்தன
த்தில் நம்பிக்கையும் அத
னால் அபிமானமும் வைத்திருந்
த அக்கிராமம் சோகத்தில்
மூழ்கியது. பிரதேச பாடசா
லைகளையும் மூன்று நாட்கள்
அனுதாபத்திற்காக மூடுவதாக
அறிவித்திருந்தார்கள்
எந்த முறையும் ஒப்பு அனு
தாபம் தெரிவித்தாலும் ஒரே
கிடம்பத்தில் இரு உயிர்கள்
மதிக்கப்படாமல் பறிக்கப்
பட்டதை தளபதியால் தாங்க
முடியவில்லை. ஒரு உயிர்
போன பின் பழிப்பழியாக
தேற்றிக் கொண்டிருந்த
காரணி தனது மூத்தமகனை
பறித்து நலில் நிலைமைக்
கு வந்ததால் குடும்ப பாரத்

தை தாங்கிக் கொண்டவள்
என்பதாகும். அந்த நிலை
தாங்கிலையும் இழந்து விழுந்
தியாயிற்று.
வேட்டுச் சத்தங்களை கேட்
டுப் பழகிய அக்கிராமம் பழ
ப் பழயபடி அயமானத்தின்
துரிய வர்களை இழக்கும் சந்
தர்ப்பங்களை நினைத்துப் பா
ர்த்த போது இக்கொலைகளு
க்கு காரணமும் நியாயமும்
கற்பிக்கப்படாமல் இருப்பதை
உணர்ந்தது. ஆனால் கொலை
காரர்களின் குறி தங்கள்
பக்கமும் திரும்பலாம் என்ற
பீதியில் வாயடைத்து விட்
டார்கள்.
ஒவ்வொரு மாலைப் பொழுதி
லும் தினசரியின் ஒப்பாரி
நாலு வீட்டுக்கு கேட்டாலு
ம் சலிக்கவில்லை கேட்பவர்
மனதில் பாரமாகிறதையே கூ
ட்டிக் கொண்டிருந்தது. மா
றி மாறி பலரும் தேற்றிப்
பார்த்தார்கள் அவளது ஒப்
பாரியிலும் பல சோக நியாய
ங்கள் பொதிந்திருப்பதை
உணர்கிறார்கள், அவளது
குடும்பத்தை வேரோடு அழிப்
பதற்கு எல்லோரும் அனும
தித்து விட்டார்களா? அவ்

வீதி சமூகத்தின் புல்லுருவிகள்
போல நியாயத்தை வளர்த்
துக் கொண்டு தமது இனத்
தையே அழிக்கும். ஏனைக்
விட்டார்களா? எல்லாவ
ற்றையும் அழித்துவிட்டு அர
சாட்சி தர்பார் நடாத்தப்
போகிறார்களா? தினசரியின் ஒ
ப்பாரி நிறுத்திப்பவர் மனதை
நெருடியது.
சோறு சாப்பிட்டு ஐந்நாறு
நாட்களாகிவிட்டன மிஞ்
சிய இரு பெட்டைகளும் தா
யின் சேலைத் தலைப்பில் படுத்
து. அம்மம்மா எப்பவாவ
தொலையும் தாயின் ஆகார
த்தையே பங்கிடுகிறார்கள்
இடைக்கிடையே மயக்கம்
ஆளை அணைவின் பரிதாப
முடிவு வாட்டி எடுத்து விட்டது
மூன்று மாதங்களின் பின்பு
தினசரி எழுந்து மில்லுக்கு வே
லை செய்ய போயவிட்டாள்
இன்றுமொரு தேற்றல் வாழ்
க்கையில் மீண்டும் ஒருமிப்பு.
மூத்த பெண்பிள்ளையை நல்ல
ஒருவனிடம் கைபிடித்துக் கொ
டுத்து விட்டால் போதும் என
று இலட்சியம் பக்கத்து வீட்
டு செல்லையா மாஸ்டரியா
ரோ ஸ் பொன்சர் பண்ணி

www.padippakam.com

வெளிநாடு போய் விட்டார்கள் அப்படி ஒரு உதவி கூட இல்லாத நீதியற்ற சந்தர்ப்பத்தை நினைத்து ஏங்கும் தனி போராளியர்களின் தேவையானவற்றை நாம் எவராலும் தீர்க்கப்படாமல் இருக்கின்றது. பிற்போக்கு தனமான செயற்பாடுகளை வெளிநாடுகளில் இருக்கும் புத்திஜீவிகளின் சுயநலமாக ஆதரிக்கும் போக்கு கேவலமானது. எந்தவொரு அடிக்டும் இனத்தை விடுவிக்க வேண்டும் என்றுதான் சொல்கிறது. ஆனால் தேசியின் இலக்கும் அப்படியல்ல; மாறுதலையானது.

# நாம் யார்க்கும் குடியல்லோம்

ஆ-வே

நாம் மார்க் (Mark)க்கு குடியல்லோம்
ஜேர்மனிக் கஞ்சோம், இடலியில் கிடந்தாலும்
பிராங், பவுண், டொலர், குரோண், கில்டன்
அல்லால் ரூபிள் வேண்டாம்
ஆண்ட பரம்பரைக் கதையால்
அலைகின்றோம் விலைகேட்டு
வேண்ட இல்லாத ஒரு தேசம்
அதனால் நாம் யார்க்கும் குடியல்லோம்.

| நாணயங்கள்: | நாடுகள் |
|---|---|
| மார்க் | ஜேர்மனி |
| பிராங் | பிரான்ஸ், சுவிஸ் |
| பவுண் | இங்கிலாந்து |
| டொலர் | அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா |
| குரோண் | டென்மார்க், நோர்வே, சுவீடன் |
| கில்டன் | நெதர்லாந்து |
| ரூபிள் | சோவியத் யூனியன் |


படிப்பகம்

# இலக்கியச் சந்திப்பு

தேசிய மனப்பான்மை இல்லா ஒற்றுமையற்ற வெறும் போராட்டத்தின் போக்கினால் பாதகமுற்று உயிருக்கும் உடைமைக்கும் அஞ்சிய அச்சுறுத்தல்களிலிருந்து விடுதலையடைய முடியாமல் தத்தளித்து விரைந்து நெருக்கடியோம் வந்து விட்டோம். புத்தியன் போயாச்சே! போனவன் திரும்பி வரானே! புகலிடங்களின் வேண்டியும் வெல்லுவோமா! என்று அந்நியதேசி. அழிப்பட்டு ஆதரவற்றுப்போய் மக்களுடன் நாமும் சங்கமிப்பதற்கு முடிந்தோ கண்டிப் பயன்படுத்தவேண்டும். இது காலத்தின் தேவை. தீர்க்கவோ தட்டிக்கழிக்கவோ முடியாத ஒன்று. எல்லாம் தெரியும் "யார் சொல்வது" என்ற பாணியில் சிலகாலம் இருந்த பின் உரிமைகள் ஆகிவிட்டது. "அறியோதல் போல வரலாற்றுக் கடமை தொடர்ந்து ஐந்து சந்திப்புக்களையும் ஒழுங்கினையும் பூர்த்தி செய்த இலக்கியம் 23.09.89ல் பாரிஸ்ட் நகரில் சந்தித்தது.

ஆரம்பகால வாசகர்களும் சிறுகதையாளரும் கவிதை தேய்ந்து கிடப்பதும் வேறு ஆக புதிய முகங்கள் பல தோன்றும் வேளை, உண்மையான பிரச்சனைகளை இலக்கியத் திறாய் விமர்சித்து விடைகாண முற்படும் பலர் தமக்கென அமைத்த வட்டங்களுக்குள் நின்று வெளிவர முடியாமல் திணறுவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. எழுத்தாளர்கள் தங்கள் கருத்துக்களை எழுதுவது போல் இந்த விமர்சகர்களும் தங்கள் கருத்துக்களை வெளியுறுத்துவது அவரவர் நிலைபாட்டைத் தெரிய வைக்கிறது. அவ்வகையில் அன்று தன்னை அறிமுகம் செய்துகொண்ட ஒரு பார்வையாளர் தனது பெயரையும் நாட்டையும் சொல்லி அதன் பின்தான் தன் கருத்தை உரைத்தார். "நான் ஒரு இலங்கை ஆனால் தமிழன்" இது இருக்கப்பட வேண்டிய விடயம். நாங்கள் இதற்கு தங்களால் திருப்தி தோற்றன. எங்களின் ஏற்பட



படிப்பகம்

www.padippakam.com

போன்றிய ஒற்றுமை இன்னும்
கிட்டவில்லை. இதை எமது எழு
த்தாளர்கள், கலைஞர்கள், சிந்
தனையாளர்கள் எல்லோரும்
கருத்திற் கொண்டு செயலாற்ற
வேண்டும். ஒடுக்கப்படுகின்ற மக்
கள் சக்திகள்தான் ஒன்றுபடுத்தி
நெறிப்படுத்தி தேவையாயின்
வழிப்படுத்தி ஒற்றுமைகாண
வைக்க வேண்டும். அதையன்றி
பெரும்பாலும் தடை பெறவில்லை.
பெண்ணடிமைத்தனத்தின் ஆரம்
பம் பற்றி கருத்தரங்கில் கட்டு
ரைகள் வாசிக்கப்பட்டன. உற்
பத்தி உபரிதான் அதன் ஆரம்ப
ம் என விளக்கினார்கள். ஆனால்
நமது தேசத்தில் இந்துமத ஆசா
ரங்களும், வழிபாட்டு முறைகளு
ம் சேர்ந்தே கொள்ளப்பட்
டிருக்கின்றன. பெண்களின்
வாழ்வும் அவர்கள் பாலியல் நோக்
கும் விதம்: உருத்திரக் கிரியுடன்
னது. இப்பொழுதும் பெண்
கள் பொருளாதார உற்பத்தியில்
ஈடுபடாத போதும் மனித உற்
பத்திக்கு உதவும் கொடுப்பன
வோர் என்ன செய்ய முடியும்.
சந்திப்புகளையெல்லாம் தீர்மானமில்
விட்டு விட்டனர் போலும்.
பெண்ணடிமை பற்றி ஆய்வினை
மாக எமது சிறிய பெண்கள்
போல அந்தளவே அதன் செய்த 34

முழுக்க எடுத்துக் காட்டாகு ×
ம்.
பாரதியைத் தனது புதுமை இல
க்கியத்தின் கதாநாயகனாகக்
கொண்டு அர்ச்சனை செய்த
ஆய்வு எமது இன்றைய காலத்
தின் தேவைக்கு மிகப் பொருத்தமா
னது. ஆனால் பாரதி அஞ்ஞாத
வாசம் செய்த தேசம் காசிக்கு
மேல் என்பதும் எம்மவர்கள்
வாழும் இடமும் தேசமும் இலங்
கை அதனாலும் பாரதியைப்
போன்ற யதார்த்த நிலையில்
இல்லாவிட்டாலும் எம் மக்களு
க்கு பாரதி போன்றவை உ
ணர்வு இல்லையே. பாரதியின்
உணர்ச்சிமயமும் எமக்கு உணர்ச்சி
மயமும் ஒப்பு நோக்கக் கூடி
யவைகளாகும்.
பாரதி தேசத்தில் பற்று வைத்
தான். மக்களை நேசித்தான்
உண்மையில் பேட்டை கொண்
டான் நம்மவர்களும் அவ்
வாறு இருந்தால் அவனைப்
போல சாதிகள் ஆகுவோர்
என நாம் கருதுகின்றோம்.
இலக்கியத்திறனாய்வு செய்த
நிகழ்ச்சி இலங்கையில் 1956ம்
ஆண்டின் பின்பே தமிழ் இல
க்கியம் வளர்ந்து தொடங்கி
றாயும். அவை இடைய இலக்
கியங்களின் போட்டியாக-

www.padippakam.com

-லி எழுத்தையாயும், தமிழ் நில் சிறந்த கவிமாதை அதற்கு முன் இருந்தவர்களில் ஆனந்த மோகனசாமியைச் சேர் விலாம் என்றார். தேசிய இலக் கியங்களின் வளர்ச்சிக்கு கம்யூனிஸ்டுகளே பெரிதும் உதவினார். டொமினிக் ஜீவா, டானியல் போன்றோர் இலக் கிய வரலாற்றில் என்றும் அழியா இடம் பிடித்தன்னா ர் என்றார். இந்த இலக்கி யத்திறகுள்ளேயே பிரதேச வாதங்கள் பேணப்பட்டு இருந்தன. யாழ்ப்பாணத்து இலக்கியங்களை தேசிய இலக் கியங்களாயும் மட்டக்களப் பு, மலை நாட்டின் படைப்புக் கள் பிரதேச இலக்கியங்களா யும் பிரிக்கப்பட்டிருந்ததையு ம் சுட்டிக்காட்டினார்.

இன்றைய இலக்கியவானில் சிறகடிக்கு ம் கவிஞர்களாக சேரனையு ம் ஜெயபாலனையும் சொன் னார். சேரனின் கண்விழித்தி ருப்போம்" "இரணைப்பாலை மிலிருந்து ஒரு கடிதம்" என் ற கவிதைகளில் யதார்த் தத்தைக் காணமுடியவில்லை உணர்ச்சியில் உண்மை

கின் மனைத்தொட்டார் கவிஞர் என்றார். "இலவி பனை யில் புரட்சி எதற்கு" என்ற வரிகள் இந்தியாவையே கு றிப்பிடுவதாயும் எமது ஆரம்ப கால போராட்டம் இந்தியா வின் அனுசரணையின்றி அமைய முடியாதது. இதனால் பயிற்சியும் உதவியும் பெறவேண்டிய தே வை இருந்தது என்றும் சொ ன்னார். இக்கவிதை 1984இல் பாடப்பட்டது இதேபோன் றே மற்றைய கவிதையும் இலங்கை அரசு ... இருக்கின்றது தெரியாத தன்மையை கவிதை கள் இழக்கின்றன என கவிஞரின் தொகுதிகள் கூறினார் கவிதை படுவோய் களைச் சொல்வது போன்று இருப்பதாகவும் கூறினார். இவரின் கருத்துகளின் சே ரனின் கவிதா உணர்ச்சி யை எனைம் செய்வதா க இருவர்கள் எழுப்ப போது "காணலிவரிக் கவிதை யில்" யதார்த்தம் இருப்பதை ஒப்புக்கொண்டு அவர் கவி ஞர்தான் என்றும் சொன்னார். யாழ்ப்பாணம் கேள்வி தனித் தன்மையை, கவிஞ ஆராய்ச்சி



படிப்பகம்

www.padippakam.com

கவிமணிகள் வீட்டிலே நாவ
கம் இவ்வாறு தன்மையை, வாழ்
க்காலங்களில் போய் பழகும்
பழக்கத்தை கொண்டிருந்தும்
பொருளா ரோகிணியாலேயாம்
தனது இயல்பான தமிழில் எழு
வாய் சொன்னார். கோர்வை
கதைப்பது போன்று பேசி யா
ரையும் பேசவிடாது தடுத்தும்
கோபப்பட்டாதும் உனக்கும்
சிறையோடு பேசினார். ஆரம்பத்
தில் மாணவிகளில் கலந்து
கொண்டு கருத்து பரிமாறி
யவர்களின் கருத்துகளுக்கு
முரணாக எதிர்ப்பையோ கரு
த்துக்களைச் சொன்ன போது
ம் யாருமே எதையும் பேசாது
மூச்சடக்கியிருந்தார்கள். பல
ரின் மாணவிகளுக்குக்கிடை
த்திகளுக்கும் ஆய்ப்புணர்ந்
தது போல் அவரின் ஆய்வு
இருந்தது. எமது இன்றைய தே
சத்தின் நிலையை போன்
றே, அவர்களின் போராட்ட
ங்களைப் பற்றியே பல போ
ராளிகளின் படைப்புக்களு
ம் பாடுமே சமூக இயக்கங்கள்
இல்லை சேர்வது வரும் உண்
மையான போராளிகள் தான்
இங்கேயே இருக்கும் எழுமல
ர்களின் பாதார்த்த நிலை

பரும் இலக்கியங்களை உருவாக்
கலாம் என்றார்.
நாயன்மார்களும் ஆழ்வார்களு
ம் கவிதை பல கவிதையால்
பாடப்பட்டது. கவிதைகளை
தனித்து அவர்கள் எல்
லைகளும் போராட்ட
அலைகளால் உந்தப்பட்
டு வெற்றியும் அடைந்தனர்.
போராட்டம் பற்றிய அவர்
களின் வழுவும் என்ன? மக்
களின் அவலம் என்ன என்
பன பிரதிபலிக்கின்றன. கவி
தை நிகழ்ச்சியை செழுமை
படுத்தியது. நாட்டுக் கூத்துப்
பாடல்கள் இசையுடன் மீட்
டப்பட்டபோது எம் நெஞ்சத்
தைத் தொட்டு திசைமாறிவந்ததோ
என்ற ஐயத்தை ஏற்படுத்தியது.
அப்பாடல்களைப் பாடியவர்கள்
பாராட்டுக்குரியவர்கள் பாட
ப்பட்ட பாடல்களும் மாற்றத்
தை விரும்புவதாகவே இருந்தன
இயற்றமிழும், இசைத்தமிழும்
நடமாட நாடகத்தமிழ் வலி
ந்து போனதோ. இலக்கியத்
தின் இரு பெரும் தூண்கள்
மக்களை இருட்டில் சென்றடை
யும் சாதனங்கள் இசையும்
நாடகமுமே, இதன் வலிமை
எம் நாடகத்திலும் காணக்கின்

www.padippakam.com

கின்றோம். இவ்விதழ் வளர்ச்சி பெற்று உயர்ச்சியடைந்து எம் தேசத்தையும் உயர்த்தி மேன்மைக்கு பேருதவியாக நடைபெறும் இந்த இலக்கிய சந்திப்பு உதவட்டும்.

# நினைவு அஞ்சலி

நெடுங்கோட்டு வேலுப்பிள்ளை என்றும் சி.வி என்றும் அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட தொழிற்சங்கவாதியும் இலக்கியபணியாளருமான சி.வி வேலுப்பிள்ளையின் ஜனன தினம் நவம்பர் 14ந் திகதியாகும்.

மலையக மக்களுக்கு வாக்குரிமை இருந்த போது முதலாவது பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மலையக பிரதிநிதிகளான, கே.ராஜலிங்கம், குமாரவேல், தொண்டமான், எ. எம். சுப்பையா முதலியோருடன் தலவாக்கொல்லை எம்.பியாக தெரிவு செய்யப்பட்டவர் சி.வி.

வே. வெய்யாரர் என்றபுனைபெயரில் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் ஆகியவற்றை தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதி மலையகத்து மண்வாசனையை மணங்கமழச் செய்த இலக்கிய சிருஷ்டியாளர் சி.வி. இலங்கை இந்திய காங்கிரஸ் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தோட்ட தொழிலாளர் சங்கம், தொழிலாளர் தேசிய சங்கம் ஆகிய தொழிற் சங்கங்களில் தொண்டாற்றி மலையக மக்களின் வளர்ச்சிக்கு பங்காற்றியதோடு உழைத்தவர், பல தோட்டத் தொழிலாளர்களின் போராட்டங்களிலும் முன்னின்று உழைத்தவர் சி.வி.

மலையக மக்களின் வரலாற்றில் அழியா இடம் பெற்று விட்ட சி.வி யை வெகுஜனம் நினைவுகூருகிறது.

www.padippakam.com

# உலகச் செய்திகள்

## அரசியல் கைதிகள் விடுதலை

தெ. ஆபிரிக்கா

ஆபிரிக்க தேசிய காங்கிரசின் தலைவர் நெல்சன் மண்டேலாவின் நெருங்கிய அரசியல் நண்பரான வால்டர் சிசுலு உட்பட எட்டு பிரதான அரசியல் கைதிகளை தென்னாபிரிக்க அரசு 15.10.89 ல் விடுதலை செய்துள்ளது. 77 வயதான சிசுலு 26 வருடங்கள் சிறையில் கழித்துள்ளார். ஆபிரிக்க கறுப்பின இளைஞர்கள் தேசிய காங்கிரசின் கொடியினை அசைத்து ஆடிப்பாடி தமது மகிழ்ச்சியினை தெரிவித்தனர்.

## முன்னேற்ற நாடுகளுக்கு இணையாக ஏவாயுதங்கள்

- இந்தியா

இந்தியா இன்னும் இரு வருட காலத்தில் பூமியிலிருந்து பூமிக்கு பாயும் ஏவாயுதங்கள், பூமியிலிருந்து ஆகாயத்தை நோக்கி பாயும் ஏவாயுதங்கள் போன்றவற்றில் குறிப்பிட்ட தொலைப் பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளதாய் இந்திய ஏவுகணை அபிவிருத்தித் திட்ட டைரக்டர் டொக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் தெரிவித்துள்ளார். பிருதுவி, திரிசூல், ஆகாஷ், நாகா ஒப்பிடும் இந்த ஏவுகணைகளின் பரிசோதித்த வெற்றிகரமான முடிவுகள் மூலம் ஏவாயுத தொழில்நுட்ப


படிப்பகம்

நாட்டில் முன்னேற்ற நாடுகளுக்கு பின் தங்காத நிலையில் இருப்பதுவும் சில துறைகளில் முன்னணி ஸ்தானத்தை அடைவது எமது நோக்கம் என்று அவர் கூறினார்.

## மீண்டும் இரசாயன ஆயுதங்கள்

-அமெரிக்கா

இரசாயன ஆயுதங்களை முற்றாக அழித்தொழிப்பது தொடர்பாக புதிய சர்வதேச உடன்படிக்கை ஒன்று கொணரப்பட்டு நடைமுறைக்கு வந்தாலும் அமெரிக்கா தொடர்ந்தும் இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்யுமென சர்வ சுதந்திரப்பிராணியில் தொங்கியிருக்கின்றார். இரசாயன ஆயுதங்களினால் ஏற்படும் அபாயத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஐ.நா சபையில் உரையாற்றிவிட்டு ஒரு மாதம் கழித்து இரசாயன ஆயுதங்களை செய்வதை தொடர்வதாக அறிவித்துள்ளதன் மூலம் புஷ் தனது சந்தர்ப்பவாத போக்கினை தாமே அம்பலப்படுத்தியுள்ளார்.

## புதிய மாற்றம் வேண்டும்

கி. ஜேர்மனி

சோவியத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சீர்திருத்த கொள்கைகள் கிழக்கு ஜேர்மனியிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென கோரி லட்சக்கணக்கான மக்கள் ஊர்வலங்களை நடாத்தி வருகின்றனர். இச்சந்தர்ப்பத்தை பாவித்து ஜேர்மனியை ஒன்றாக்கிவிட வேண்டுமென்பதில் மேற்கு ஜேர்மனி பரிந்து கட்டிக்கொண்டு முன்னுக்கு வருகிறது. மேலும் உலக நாடுகளின் அக்கறைகள் அழுதாட்

www.padippakam.com

டுக்கள் கிழக்கு ஜேர்மனி வழியாக வருவதைத் தடை ப்பதற்கு கி. ஜேர்மனிக்கு பணம் கட்டிய மே. ஜேர்மன் அரசு, இப்போது கிழக்கு ஜேர்மன் மக்கள் மேற்கு ஜேர்மனிக்குள் வருவதற்கு தவிர்க்கு ஓட்டுக்க கிழக்கு ஜேர்மனி மக்களை புடபெஸ்ட் (BUDApest) வழியாக அனுமதிக்க பணம் கட்டி முயற்சிக்கின்ற போதெண்டாலும் கி. ஜேர்மனி எதிர்த்து முயற்சிக்கியால் அது தடுக்கப்பட்டுள்ளது. கி. ஜேர்மனி மக்கள் உணவு, இருப்பிட வசதி மற்றும் தொழில் வாய்ப்பின்மையால் தான் மே. ஜேர்மனிக்கு வருகின்றார்கள் என நினைக்கின்ற வேளையில் ஆனால் கடந்த ஆண்டு பல் கட்ட விசேடமாக குடியேறிய ஆயிரம் மே. ஜேர்மனியருக்கு அமெரிக்கா குடியுரிமை வழங்கியுள்ளது. அப்படியானால் மே. ஜேர்மனியில் உணவு, தொழில் இருப்பிட வசதி இல்லையா

## கடன் சுமை ஆராய்வு

சர்வதேச நாணய நிதியத்தின் அண்மையில் நடைபெற்ற கூட்டத் தொடரில் மூன்றாம் உலக நாடுகள் நாணய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் பளு பற்றி ஆராயப்பட்டது. பழைய கடனில் ஒரு பகுதியை தள்ளி விட வேண்டுமென்றும் புதிய கடன்கள் கொடுபட வேண்டுமென்றும் கூறப்பட்ட யோசனையை தனியார் வங்கிகள் நிராகரித்துள்ளன. கடந்த ஆண்டில் செல்வந்த நாடுகளிலிருந்து வறிய நாடுகளுக்கு வழக்கப்படும் நிதியைவிட வறிய நாடுகளிலிருந்து செல்வந்த நாடுகளுக்கு செலுத்தப்பட்ட பணம் 5000 கோடி டொலர்கள் அதிகமென கணக்கிடப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



## யாழ். பல்கலைக்கழக

## மருத்துவ பீட விரிவுரையாளர்

# திருமதி ரஜனி திரணகம படுகொலை!

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளரும், புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேறி தற்போது இலண்டனில் வசித்து வரும் திருமதி நிர்மலா நித்தியானந்தனின் சகோதரியுமான திருமதி ரஜனி திரணகம அவர்கள் கடந்த 21 - 9 - 89ல் யாழ். பல்கலைக்கழகத்துக்கருகாமையில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த செங்கதிர், டில்லி, சின்ன அக்காச்சி ஆகியோரால் பகிரங்கமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இலங்கை — இந்திய அரசுகள் பேச்சுவார்த்தைகளின் மூலம் மேற்கொண்ட உடன்பாட்டின் அடிப்படையில், இந்திய அமைதிப் படையினரால் அறிவிக்கப்பட்டுள்ள யுத்த நிறுத்தத்தை தாம் பூரணமாகக் கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொண்டு, அதே சமயம் தமக்கு வேண்டாதவர்களையும் மாற்று இயக்கத்தவர்களையும், தமது போக்குக்கு இணங்காத புத்திஜீவிகளையும் கொலை செய்யும் நடவடிக்கைகளை புலிகள் தீவிரப்படுத்தியுள்ளனர்.

பேரினவாத இலங்கை அரசின் கைக்கூலிகளாக மாறி, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான திருவாளர்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரைப் படுகொலை செய்ததை தமிழ் பேசும் மக்கள் இலேசில் மறக்க முடியாது. இவ்வாறு அரசியல் தலைவர்களையும், அரச உயர் அதிகாரிகளையும், விரிவுரையாளர்களையும் கொலைசெய்வதையே தமது மரபாகக் கொண்டுள்ள புலிகளின் 'சமாதான' வேஷத்தை' மருத்துவபீட விரிவுரையாளர் திருமதி ரஜனி திரணகமவின் கொலை மீண்டும் அம்பலப்படுத்தியுள்ளது

பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி பற்றியும், அவர்களின் எதிர்காலம் தொடர்பாகவும் முதலைக் கண்ணீர் வடிக்கும் மாணவர் அமைப்புகளும், ஏனைய வெகுஜன அமைப்புகளும் இக்கொலை தொடர்பாக இன்றுவரை மௌனம் சாதிப்பது எமக்கு வியப்பை அளிக்கின்றது. அதே சமயம் பல்கலைக்கழக நிர்வாகமும் அதன் விரிவுரையாளர்களும் மாணவர்களும் கூட இவ் ஈனத்தனமான கொலை நடவடிக்கையைக் கண்டிக்காமல் இருப்பது, இத்தகைய கொலை முயற்சிகள் மேலும் தொடர்வதற்கே உதவும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஆகவே, இதுபோன்ற கோழைத்தனமான கொலைகளின் மூலம் புலிகள் யுத்த நிறுத்தத்தை மீறுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இத்தகைய பாசிச நடவடிக்கைகளுக்கெதிராக தமிழ் பேசும் மக்கள் ஐக்கியப்பட்டுக் குரல் கொடுப்பதின் மூலம் இக் கும்பலின் நயவஞ்சகப் போக்கை அம்பலப்படுத்த முன்வரவேண்டும்.

யாழ்ப்பாணம்

23 - 9 - 1989

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**

படிப்பகம்

www.padippakam.com

# ஐக்கியப்படுவோம்
# போராடுவோம்
# அமைதி காண்போம்

படிப்பகம்